# NGM COLLEGE

(AUTONOMOUS)

Re-Accredited with 'A' Grade by NAAC

An ISO 9001 : 2015 Certified Institution

POLLACHI - 642 001

NGM 60

1957 2017

DIAMOND JUBILEE

# மனையியல் மகத்துவம்

(சான்றிதழ் பாடத்திட்டம்)

(Certificate Course)



## குடும்பப் பண்பாடும் பாரம்பரியமும்

இரண்டாம் தாள்

*Empower the Youth to Enrich the Nation*

# மனையியல் மகத்துவம்

## சான்றிதழ் பாடத்திட்டம்

## (Certificate Course)

முனைவர் க. தனலட்சுமி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி.

## குடும்ப பண்பாடும் பாரம்பரியமும்

## இரண்டாம் தாள்

பதிப்பு

**என்.ஜி.எம்.கல்லூரி**

**பொள்ளாச்சி**

பாட நூல் : மனையியல் மகத்துவம்
பதிப்பு : முதற்பதிப்பு - 2018
வெளியீடு : என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.

## ஆலோசனைக் குழு

**டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர்**
தலைவர், என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.

**முனைவர் வாசுகி ராஜா**
புலமுதன்மையர், மனையியல் கல்வித் துறைகள்
அவினாசிலிங்கம் உயர்நிலைக் கல்வி கோவை.

**முனைவர் மணிமொழி**
இணைப் பேராசிரியர்,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம் - நிகர்நிலைப்பல்கலைக்கழகம், கோவை.

**முனைவர் அ.லோகநாயகி**
உதவிப் பேராசிரியர், அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம், கோவை.

**திருமதி சுமதி முத்துசாமி**
ஆசிரியர் மற்றும் தலைவர், கிராமப்புற தத்தெடுப்புத் திட்டம்
அறிவுத் திருக்கோவில், பொள்ளாச்சி.

## நூல் ஆக்கக் குழு

### தலைவர்

முனைவர் பொ.மா.பழனிசாமி, முதல்வர்

### தொகுப்பாசிரியர்

முனைவர் ப. பிருந்தா, தலைவர் வணிகவியல்துறை

### துணை தொகுப்பாசிரியர்கள்

பேராசிரியர் என்.இராதா, தலைவர் ஆங்கிலத்துறை (சுயநிதி)
முனைவர் ஜி.அகிலாண்டேஸ்வரி, தலைவர் வணிக நிதியியல்துறை (சுயநிதி)
முனைவர் எம்.வி.சத்தியபாமா, தலைவர் மின்னணு வணிகவியல் துறை (சுயநிதி)
முனைவர் க.தனலட்சுமி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
பேராசிரியர் எஸ்.ஜெயலட்சுமி, தலைவர் மனிதவள மாண்புத்துறை (சுயநிதி)
முனைவர் ஆ.மகாலட்சுமி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
முனைவர் ப.வடிவேல், இணைப்பேராசிரியர் (ப.நி), தமிழ்த்துறை

---

அச்சிட்டோர் : ருக்மணி ஆப்செட் பிரஸ், சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கோவை - 6
போன் : 0422-2672789, 2672435. ஈமெயில் : office.rukmaniop@gmail.

# பொருளடக்கம்


அணிந்துரை

வாழ்த்துரை

ஆசிரியர் உரை

நோக்கங்கள்

பாடத்திட்டம்

1. சகிப்புத்தன்மையே வெற்றிக்கு வழி — 1
   முனைவர் ப.பிருந்தா
2. சகிப்புத்தன்மைக்குச் சான்றுகள் — 8
   முனைவர் எம்.வி.சத்தியபாமா
3. அனுசரணையும் அரவணைப்பும் — 16
   முனைவர் ஆ. லோகமாதேவி
4. அனுசரணையின் பயன்கள் — 22
   முனைவர் க.அகிலாண்டேஸ்வரி
5. பொறுமை பெண்ணின் பெருமை — 27
   பேராசிரியர் பி.நாகராஜன்
6. பொறுத்தார் பூமி ஆள்வார் — 32
   பேராசிரியர் பி.நாகராஜன்
7. குடும்ப கௌரவம் — 37
   பேராசிரியர் நா.ராதா
8. பெண்கள் கௌரவத்தின் நாற்றங்கால்கள் — 44
   முனைவர் எஸ். மாரியம்மாள்
9. மறப்போம் மன்னிப்போம் — 47
   முனைவர் ப.வடிவேல்
10. மறப்பதும் மன்னிப்பதும் மங்கையரின் மாண்பு — 51
   முனைவர் ப.வடிவேல்

மாதிரி வினாத்தாள்

# 4.2. பெண்கள் கௌரவத்தின் நாற்றங்கால்கள்

முனைவர் எஸ்.மாரியம்மாள்
உதவிப் பேராசிரியர், ஆங்கில மொழியியல் துறை,
என்.ஜி.எம். கல்லூரி.

## 1. குடும்ப கௌரவம் காத்தலில் பெண்களின் பங்கு

குடும்பம் தான் சமூகத்தின் சிறிய அலகு, சமூகம் என்பது ஒரு குடும்பம். அப்படிப்பட்ட குடும்ப கௌரவத்தை மேலோங்கச் செய்வதில் பெண்களின் பங்கு மிக மிக அற்புதமானது. சிலை செதுக்க சிற்பி எவ்வாறு அவசியமோ, அவ்வாறு ஒரு குடும்ப கௌரவத்தை பேணிக் காத்தலில் பெண்களின் பங்கு மிக மகத்தானது. குடும்ப கௌரவம் என்பது கையில் ஏந்தும் கண்ணாடிக் குடுவையைப் போன்றதாகும். மனித சமுதாயத்தின் அடிப்படை அலகு குடும்பமாகும். குடும்ப அமைப்பு, ஒழுங்கான முறையில் அமைவதற்கு பெண்களின் பங்கு மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. மகாபாரதத்தில் கர்ணனுக்கு கவச குண்டலம் எப்படி முக்கியமானதோ, அவ்வாறே பெண்ணுக்கு தன் குடும்பத்தின் கௌரவம். தன் பாதம் பதிக்கின்ற ஒவ்வொரு பாதச் சுவடுகளிலும் குடும்ப கௌரவத்தை எண்ணியே செயல்படுகிறாள். பெண்ணின் பெருமையே மண்ணின் பெருமையாகும். அப்படிப்பட்ட பெண் தன் குடும்ப கௌரவம் காத்தலில் அச்சாணியாக இருப்பாள்.

## 2. செயல்பாடுகளில் கௌரவம் காத்தல்

"பொறுமையைக் காத்தால் பெருமையாக வாழலாம்" என்ற பழமொழிக்குப் பொருத்தமான சான்றாக இருப்பவர்கள் பெண்கள். தன் குடும்பச் சூழலுக்கு ஏற்ப, தன்னைக் கட்டுப்படுத்தி வாழக் கூடியவள் பெண். சில நேரங்களில் குடும்ப உறுப்பினர்களின் சூழ்நிலையை அறிந்து சில தியாகங்கள் செய்து குடும்ப கௌரவத்தை காப்பவள் பெண். பின்நோக்கும் பாதையை நோக்காமல் தன் குடும்பத்தை முன்நோக்கி வழிநடத்தி வழிவகுப்பவள் பெண்ணே.

குடும்பத்தில் ஒரு வசதியை ஏற்படுத்தும் பொழுது மற்றவர்க்கெல்லாம் கிடைத்த பின்னரே தாம் பெறலாம் என்ற நோக்கமுடையவள் பெண் ஆவாள். ஒரு பெண் சூழல் அறிந்து எவ்வித முடிவுகளையும் எடுப்பாள். ஒரு காரியம் செய்யலாமா எனும் பொழுது மற்றவர்ளை எப்படி பாதிக்கும் என்ற யோசனை செய்த பிறகு செயல்படுவது பெண்ணின் இயல்பு. குடும்ப உறுப்பினர்களில் ஒருவர் நஷ்டத்தை ஏற்படுத்தி விட்டால் அதை இழப்பு என்று கருதாமல் அவள் மனது புண்படாமல் செயல்படுவது பெண்ணின் குணம். குடும்பத்திலுள்ள பிறர் துன்பங்களைப் போக்கும் சக்தியாக திகழக் கூடியவள் பெண் ஆவாள்.

பெண் என்பவளுக்கு தாய்மை என்பது மிகப்பெரிய வரப்பிரசாதம். ஒரு குழந்தையைத் தன் கருவில் பத்து மாதம் சுமந்து பெற்றெடுக்கும் பெருமை வாய்ந்தவள் பெண். தன் குடும்பத்திற்கும், குழந்தைக்கும் சகலமும் கற்றுக் கொடுப்பவள். அனைத்து நல்ல செயல்களையும் சொல்லித் தரும் முதல் ஆசான் ஆவாள். எது நல்லது என்றும், எது தீயது என்றும் சொல்லித் தருபவள். தன் செயல்பாடுகளில் குடும்பத்தைப் பற்றி அந்தக் குழந்தை அறிந்து செயல்படும். அப்பாவிற்கும் இதில் பங்கு உண்டு. இருந்தாலும் எந்நேரமும் உடன் இருந்து கற்றுக் கொடுப்பவள் அம்மா. நல்லது செய்தால் பாராட்டி, தவறு இழைத்தால் கண்டித்து வளர்ப்பவள். ஒரு குருவாக, தோழியாக, மருத்துவராக, வழிகாட்டியாக, நிர்வாகியாக இருப்பாள். ஒரு வட்டத்தில் நடுப்புள்ளி யார் என்று வினவினால் அது அம்மாதான். குடும்பத்தில் உள்ள அனைவரையும் பேணிக் காத்து சந்தோசத்திற்கு ராணி என்றே சொல்லலாம். முதல் ஆசான் என்ற பெருமை வாய்ந்தவள் பெண்ணே. உறவுகளின் உன்னதத்தைப் புரிந்து கொண்டு குடும்பச் செயல்பாடுகளில் குடும்ப கௌரவத்தை கட்டிக் காப்பவளும் பெண்ணே.

### 3. குடும்ப கௌரவத்தைக் கற்றுக் கொடுத்தல்

மங்கையராய் பிறப்பதற்கு மாதவம் செய்திட வேண்டும் என்று பாடியுள்ளார் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை. தைரியத்தையும், நம்பிக்கையையும் ஆயுதமாகக் கொண்டவர்கள். மாதா, பிதா, குரு, தெய்வம் இதில் முதலிடம் பெறுவது மாதா. கல்விக் கடவுள் சரஸ்வதி என்பதைப் போல குடும்ப கௌரவத்தைக் கற்றுக் கொடுப்பவள் பெண் ஆவாள். குழந்தையைத் தன் கருவில் சுமக்கும் போது, தன்னைப் பற்றியும், குடும்ப பாரம்பரியத்தையும் சொல்லி வளர்ப்பாள். குழந்தை பிறந்த பிறகு மீண்டும் தனது தாலாட்டுப் பாட்டின் மூலம் அதைக் கூறுவாள். தன் குழந்தை வளரும் போது பெரியவர்களை மதிக்கக் கற்றுக் கொடுப்பாள். தன் குழந்தை மட்டும் அல்லாது பிற குழந்தைகளையும் பேணிக் காப்பதில் தாய்க்கு நிகர் வேறு யாரும் இல்லை. குடும்பத்தில் உள்ள அனைவர்க்கும் சரியான பாதையைக் காட்டும் நல்லதொரு வழிகாட்டியாக திகழக் கூடியவள். உறவுகளின் உன்னதத்தைப் புரிய வைத்து மகிழக் கூடியவள். என்னதான் விஞ்ஞானம் வளர்ந்தாலும், நன்நடத்தையைக் கற்றுக் கொடுப்பதில் பின்தங்கிவிடக்கூடாது.

### 4. பெண்களின் குடும்பக் கௌரவ மேலாண்மை

பெண் தன் புகுந்த வீட்டிற்கும், பிறந்த வீட்டிற்கும் பெருமை சேர்க்கும் வகையில் நற்சிந்தனையுடன் செயல் புரிவாள். எந்த ஓர் சூழ்நிலையிலும் யாருக்காகவும், எதற்காகவும் குடும்ப கௌரவத்தை விட்டுக் கொடுக்காமல் அதை நிலைநாட்டுபவள் பெண்தான். இதை இப்படித்தான் செய்ய வேண்டும் என்ற திண்ணம் கொண்டவள். எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்கிற சொல்லுக்கு முட்டுக்கட்டையை போட்டு இப்படித்தான் வாழ வேண்டு என்கின்ற வழி வகுத்து வாழக் கூடியவள். குடும்பத்தின் சிறந்த நிர்வாகியாக, தலைவியாக ஆசானாக திகழ்ந்து மகிழ்ச்சியைத் தருபவள். வைரத்தை தங்கத்தில் பதித்தால் தான் மதிப் உயரும் என்பதைப் போல குடும்ப கௌரவத்தைப் பெண்கள் காப்பாற்றினால் அதன் மதிப் உயரும். நற்குணம், பொறுமை, சகிப்புத்தன்மையை தன் அணிகலன்களாக அணிந் இருப்பவள். சுயநலம் இல்லாத அன்புதான் மிக முக்கியமானதாகும். குடும்பம் ஒரு கோவி

என்பார்கள். மனைவி அமைவது எல்லாம் இறைவன் கொடுத்த வரம். தெய்வத்தின் அருளால் தான் அனைத்தும் இயலும். பெண் என்பவள் உண்மையான அன்பை நல்கி, மலையளவு நம்பிக்கையுடன் மற்றும் ஊட்டச்சத்தாக ஊக்கம் கொடுத்துக் காத்து இருப்பவள். நேர்மறை எண்ணம் இருந்தால் குடும்பம் மேலோங்கி வளரும். தேவை இல்லாது உணர்ச்சி வசம்படுதல் என்பது கௌரவத்தை பாதிக்கக் கூடியதாகும். குடும்ப கௌரவ மேலாண்மையைக் காத்திட எந்நேரமும் முழுசிந்தனையைச் செலுத்தக் கூடியவள் பெண்ணே.

## 5. கௌரவம் காத்திடு

ஒரு பெண்ணிற்கு பொன் நகையைவிட புன்னகை தான் மிகச் சிறந்த அணிகலன்கள். வீட்டிலிருக்கும் அனைவரும் நன்றாக இருந்தாலே அங்கு ஆட்சி சிறப்பாக இருக்கும் என்று பொருள். அதுமட்டும் அல்லாது அங்கு மகாலட்சுமி வாசம் புரிகின்றாள். அந்தப் பெண் இன்முகத்துடன் செய்யும் செயல்களில் வெற்றி தேவதை வழித்துணையாக இருப்பாள். பெண் என்பவள் பொறுமை காத்து சிறுமை கண்டால் வெகுண்டு தன் குடும்ப கௌரவத்தைக் காப்பாள். தன் வீட்டின் கௌரவத்தைக் காத்திட மெல்லப் பேசுதல், கூடாத நட்பு, பொறாமை, தீய எண்ணங்கள், பேராசை, புறம் கூறுதல், சிக்கனச் செலவு போன்றன மிக இன்றியமையாதவையாகும். பெண்ணிற்குப் பொறுமையாக இருக்கவும் தெரியும். போர் புரிதலும் தெரியும். தன் குடும்ப கௌரவத்தைக் காக்க எதைச் செய்யவும் துணிந்து இருப்பாள். புதுமைக்கும் சரி, புரட்சிக்கும் சரி உதாரணம் பெண்ணே. குடும்பம் நடத்துவதும் ஒரு கலையே. உத்வேகமும், உற்சாகமும் குடி கொண்ட கோயில் தான் பெண்ணின் மனது. அந்த அற்புதமான மனதில் கௌரவத்தைக் காக்க அணையா விளக்கு சுடர் விட்டுக் கொண்டே இருக்கும். பூசலார் மனதில் சிவபிரானுக்கு கோயில் கட்டியது போல், வீடு என்ற கட்டிடத்திற்குள் மனதாலும், உணர்வாலும், பண்பாலும், பாசத்தாலும் நாம் கட்டும் மானசீகக் கோயில் தான் குடும்பம்.

பெண்ணின் மனம் அள்ள அள்ளக் குறையாத அன்பு நிறைந்த அட்சய பாத்திரம். அது சுரந்து கொண்டே இருக்கும் அமுதசுரபி. குடும்ப கௌரவத்திற்கு காவல் காக்கும் குலதெய்வம் ஆவாள். தன் குடும்பத்தை மட்டும் பாராமல் பிற வட்டங்களிலும் தன் கருணை மழையைப் பொழிவாள். எதிலும் ஏனோ தானோ என்று இருக்காமல் உறுதியான நிலைப்பாட்டினைக் கொண்டிருப்பாள். வாழ்க்கையை வெற்றிகரமாக வாழ நல்ல நேர்மறை எண்ணம் தேவை. அவ்வாறு செயல்படும் போது சகலமும் சந்தோசம் தரும்.

குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரின் மனநிலையை அறிந்து குடும்ப கௌரவத்தைக் காத்து வருவாள். எந்தவித அளவுகோல்களாலும் அளவிடமுடியாத அன்பு, கடமை, நேசம் தான் பெண். உன்னால் முடியும் என்ற மந்திரத்தை அனைவர்க்கும் சொல்லிக் கொடுத்து வெற்றி அடையச் செய்வதும் கௌரவத்தை காக்கும் செயலே.



ISBN-978-93-87009-37-

மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம்செய்திட வேண்டும் அம்மா !
பங்கயக் கை நலம் பார்த்தல்லவோ பாரில் அறங்கள் வளரும், அம்மா ! – கவிமணி